அம்மா உன்மடிமீது விழி மூடித்தூங்க என் மனம் ஏங்குது
தாயே உன் தோள்மீது தலைசாய்த்துங்க தினம் மனம் நாடுது
காலத்தின் கோலத்தால் பனிவேசம் சேர்ந்தேனே
எண்ணங்கள் இங்கில்லையே ஊரோடு உறவாட
என்றுன்னை சேர்வேனோ நான் எண்ணி தினம் வாடுறன் 2

அம்மா உன்மடிமீது விழி மூடித்தூங்க என் மனம் ஏங்குது
தாயே உன் தோள்மீது தலைசாய்த்துங்க தினம் மனம் நாடுது

கண்மூடி தூக்கத்தில் நான் சாயும் நேரம் விழிகளில் கனவாகிறாய்
இமைமூடா நேரத்தில் என்றென்றும் நீ எந்தன் நெஞ்சினில் நினைவாகிறாய்
சிறகில்லாப் பறவை நான் தொலைதூரம் பறந்தாலும் கருவறை மறந்ததில்லை
உயிர்காக்க ஊர் விட்டு ஊர்வந்து வாழ்ந்தாலும் உள்ளத்தால் பிரிந்ததில்லை

அம்மா உன்மடிமீது விழி மூடித்தூங்க என் மனம் ஏங்குது
தாயே உன் தோள்மீது தலைசாய்த்துங்க தினம் மனம் நாடுது

முற்றத்து மாம் பூவே உன்வாசம் தேடி என்கால்கள் விரைந்தோடுமே
வேலியில் நின்றாடும் பூவரசம் பூவும் என் கண்ணில் நின்றாடுமே
தாய் மண்ணில் என்கால்கள் தடம்போடும் நேரம் நெஞ்செல்லாம் வீங்காரமே
கோயில் மணியோசை காதினில் தேன் வார்க்க உன் மடி விழிதூங்குமே

அம்மா உன்மடிமீது விழி மூடித்தூங்க என் மனம் ஏங்குது
தாயே உன் தோள்மீது தலைசாய்த்துங்க தினம் மனம் நாடுது
காலத்தின் கோலத்தால் பனிவேசம் சேர்ந்தேனே
எண்ணங்கள் இங்கில்லையே ஊரோடு உறவாட
என்றுன்னை சேர்வேனோ நான் எண்ணி தினம் வாடுறன் 2